# மணலாறில் புலிகள் தாக்கு; 4 படையினர் பலி

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY'

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 01 இதழ் 338
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14 — 01 — 1993

(மணலாறு)
மணலாறு மாவட்டத்தில் நேற்று விடுதலைப்புலிகள் இராணுவத்தின் மீது மேற்கொண்ட அதிரடித் தாக்குத (8-ம் பக்கம் பார்க்க)

## பாரிஸ் பேச்சில் உடன்பாடு?

(ரொறன்ரோ)
விடுதலைப் புலிகளின் முக்கி உஸ்தர் திரு. லோறன்ஸ் திலகரும், அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத்திற்குமிடையில் பாரிஸில் நடைபெற்ற பேச்சுக்கள் பெருமளவில் திருப்தி (8-ம் பக்கம் பார்க்க)

## ஹமீத் விளக்கம்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் முக் கியஸ்தர் திரு. திலகருடன் பாரிஸில் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்து அமைசசர் (8-ம் பக்கம் பார்க்க)

## விடுதலையான பொலிஸாருடன் ஆயர் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)
அங்கிலிகன் திருச்சபை கொழும்பு ஆயர் கென்னத் பெர்ணண்டோ தமது யாழ். விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று கொழும்புக் குப் பயணமானார். (8-ம் பக்கம் பார்க்க)

# "போராளிகளின் வீரசாதனைகளை இனங்கண்டு கௌரவிக்கிறோம்"

## பரிசளிப்பு வைபவத்தில் தலைவர் உரை

(யாழ்ப்பாணம்)
"எமது விடுதலை இயக்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு போராளியினதும் தனிப்பட்ட திறமையிலும், செயற்பாட்டிலுமே விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. எனினும் சில குறிப்பிட்ட போராளிகளின் அபாரமான வீரசாதனைகளை நாம் இனங்கண்டு கௌரவிக்கிறோம். இது ஏனைய போராளிகளுக்கு ஊக்கத்தை அளிக்கும்"

இவ்வாறு தலைவர் பிரபாகரன் நேற்று வீரச் செயல் புரிந்த போராளிகளுக்கு பரிசில்கள் வழங்கிய நிகழ்ச்சியில் உரையாற்றும்பொழுது குறிப்பிட்டார்.

இராணுவ வேவுப்பிரிவில் பணியாற்றி சாதனை புரிந்தவர்கள் பற்றிக் குறிப்பிட்ட தலைவர், "உங்களது செயற்பாடு எத்தனை கஷ்டங்களும் ஆபத்துக்களும் நிறைந்தது என்பதை நான் அறிவேன். ஒரு தாக்குதல் திட்டம் வெற்றி பெறுவதற்கு உங்களது பணி மிகவும் முக்கியமானது".

"வீர சாதனை புரிந்த நீங்கள் ஏனைய போராளிகளுக்கு வழிகாட்டிகளாக செயற்பட வேண்டும். உங்களது செயல் மற்றவர்களுக்கு உந்து சக்தியாக அமையவேண்டும்" என்று தலைவர் மேலும் கூறினார்.

இவ்வைபவத்தின்போது 17 போராளிகளுக்குத் தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். இச்சம்பவங்களினதும் போராளிகளினதும் விபரம் வருமாறு:

29.08.1992 அன்று யாழ். மாவட்டத்தில் உள்ள மண்டைதீவில் கடற்படையினரின் கடல் எல்லைக்குள் சென்ற போராளிகள் மின்னல் வேகத் தாக்குதல் ஒன்றினை நடத்தி அவர்களது 45 அடி நீளமான "வோட்டர் ஜெற்" படகு ஒன்றினைக் கைப்பற்றினர். இத்துணிகர நடவடிக்கையில் ஈடுபட்ட தம்பி, ஜீவா, ஆழியன், தென்னவன் ஆகியோருக்குத் திறமையாகச் செயற்பட்டமைக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டது.

25-09-1992 அன்று மன்னார் மாவட்டத்தில் பூநகரியிலுள்ள பள்ளிக்குடா என்னுமிடத்தில் அமைந்திருந்த இரு இராணுவ மினிமுகாம்களையும் 62 தொடர் காவலரண்களையும் போராளிகள் தாக்கி அழித்தனர். இத்தாக்குதலின்

(8-ம் பக்கம் பார்க்க)



கதிரவன் என்ற போராளிக்கு, தலைவர் பிரபாகரன் பரிசளிப்பதை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

பொங்கல் வாழ்த்துக்கள்



வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி

## பேச்சுவார்த்தைக்கு முன் யுத்த நிறுத்தம் தேவை

—சு. கட்சி எம். பி. ராஜரட்ணம்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றைக்காண அரசு விரும்பினால் அதற்கு முன் யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு சுதந்திரக்கட்சி எம்.பி.யும், முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான திரு. ரி. டபிள்யூ. ராஜரட்ணம் கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பிற்கு தமது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ள திரு ராஜரட்ணம் சிறினிவாசனின் சமஷ்டித் தீர்வை நிராகரித்துள்ளார்.

சிறினிவாசனின் திட்டம் 'கடதாசிப்பூ' போன்றது. இதனை நான் எதிர்க்கிறேன். மேலும் இந்திய மாநிலங்களுக்கு ஒத்த ஆட்சி முறையையும் எதிர்க்கிறேன் என்றார்.

திரு ராஜரட்ணம் சுதந்திரக்கட்சி சார்பில் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

## அதிரடிப்படை சூட்டில் சுவிஸ் பிரஜை படுகாயம்

(பொத்துவில்)
ஸ்ரீலங்கா அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது சுவிஸ் பிரஜையான றெஞேலோ ஒன்மர் ஜோசப் என்பவர் படுகாயமடைந்து பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா அதிரடிப் படையின சோதனை நிலையத்தின் முன்னால் இவர் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த போது துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கானதாக தெரிய வருகிறது. (க)

## 35 தமிழர் விடுவிப்பு?

(யாழ்ப்பாணம்)
நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 35 தமிழர்கள் கூடிய விரைவில் அரசினால் விடுவிக்கப்படவுள்ளனர்.

களுத்துறைச் சிறையிலிருந்து 15 பேரும், பலாலி முகாமிலிருந்து 20 பேருமே விடுவிக்கப்படவுள்ளனர் என தெரியவந்துள்ளது.

கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரச அதிபரின் தீவிரமுயற்சியினாலேயே இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர் என கொழும்பிலிருந்து கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது. (56)

## வரிவிளம்பரம்

### விதைதேவை

புளியம் விதை தேவை. தொடர்பு:- மிக்கேவற். (எ-2792)

### மிருதங்கம்

நீங்கள் விரும்பும் அளவுக் கேற்ப புதிய மிருதங்கம் குறித்ததவணையில் ஓடருக்கு செய்து தரப்படும். கோவிந்த பிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (சி-7120)

### 29 - 1 - 93 வியாழன் வக்கிரம் ஆரம்பம்

புத்தாண்டுப் பலன்களும் வியாழன், செவ்வாய் வக்கிரங் களும் ரூ. 8/-பொங்கல் முதல் எங்கும் விற்பனை யாகின்றன. மக்மிலன். கிருஷ்ணசாமி புத் தகசாலைகள் - யாழ்ப்பாணம். (நூலாசிரியர் - Prof. சத்திய தாஸன். (சி-7138)

### கல்வி

ஆண்டு 5லிருந்து (O. L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பிலிருந்து (A. L) வரை சகல பாடங் களும் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந் திரா வீதி, சுண்டுக்குளி. (சி-7131)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலை யிடி, தலைகாலக்கயல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத் திர ரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-7119)


## கைக்குண்டு வெடித்து ஒருவர் பலி

(கொழும்பு)

புதிதாக திறக்கப்பட்ட ஆடைத்தயாரிப்பு தொழிற் சாலை ஒன்றின் மீது கைக் குண்டு வீசியவர் அக்குண்டு வெடித்து உயிரிழந்துள்ளார்.

இக்குண்டுத் தாக்குதலை மூவர் நடத்தியதாகவும் குண்டுவெடிப்பினால் மூவரில் ஒருவர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டதும் மரணமடைந்துள் ளாராம்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் தென்பகுதியில் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (சி)


இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!......

★ அனைத்து ஆங்கில மருந்து வகைகள்
★ குழந்தைகளுக்கான பால் மா உணவு
★ அன்பளிப்புப் பொருட்களுக்கு

**குறிஞ்சி மருந்தகம்**

3, நவீன சந்தை
திருநெல்வேலிச் சந்தி
(எமக்கு வேறு கிளைகள் இல்லை)

உயிரோட்டமுள்ள புகைப்படக் கலைஞர்களின்
**மங்கள பொங்கல் நல்வாழ்த்துக்கள்**
**மழலை புகைப்பட நிலையம்**

கறுப்பு வெள்ளை கலர் புகைப்படங்களை
நினைத்த நேரத்தில் நிழலாடும் நினைவுகளுடன்
அவசரமாக பூர்த்திசெய்து தருபவர்கள்
வீடியோ ஓடியோ படப்பிடிப்பு ஏற்றுக்கொள்ளப்படும்.

**பேபி போட்டோ**

(புகைப்படக்கலை நிபுண சேவை)
வளாக சந்தி, பலாலி வீதி திருநெல்வேலி



கிராம அபிவிருத்தி இலாகாவின்
மாதர் அபிவிருத்தி நிலையங்களில்
**தையல், மனையியல்**
**பயிற்சிக்கான விண்ணப்பம்**

கல்வித்தகமை: கல்விப் பொது சாதாரண பரீட்சை சாதாரணதரம்
வயது எல்லை: 18 வயதிற்கு மேல்
விண்ணப்பமுடிவு திகதி: 30-01-1993
பயிற்சி ஆரம்பம்; 10-02-1993

பயிற்சி நிலையங்கள் அமைந்திருக்கும் பிரிவுச் செயலர் பிரிவுகள்:

★ யாழ்ப்பாணம் ★ நல்லூர் ★ சங்கானை
★ சாவகச்சேரி ★ கரவெட்டி ★ ருத்திரபுரம்
★ கோப்பாய் ★ உடுவில் ★ வேலணை

விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பதாரர் வதி யும் பிரிவுச் செயலருக்கு விலாசமிடப்பட்டு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

தபால் உறையின் இடதுபக்கமேல்மூலையில் தையல் மனையியல் பயிற்சிக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிட வேண்டும்.

து. வைத்திலிங்கம்
மாவட்ட பிரதி ஆணையாளர்
அரச அதிபருக்காக,
யாழ். மாவட்டம் (எ 2788)



அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்




எமது மண்ணில் போஷாக்குக் குறைவை நிவர்த்தி செய்யும் ஒரே உணவு

**ஜீவாகாரம்**

அனைத்து அண்ணா கோப்பி கிளைகளிலும் விற்பனையாகின்றது



இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்
திறப்புவிழாவும்
**"ராகபாவம்"**
நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: **மன்ற கலாமண்டபம்**
சட்டநாதர் வீதி, நல்லூர்
காலம்: 6-2 93 முதல் 8-2-93 வரை
கலாமண்டபத் திறப்புவிழா
6-2-93 சனிக்கிழமை

**நிதியுதவி நிகழ்ச்சி**

7-2-93 ஞாயிறு (முதலாம் நாள்)
மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை
5-00—6-30 நாதஸ்வர இசை:
நாதஸ்வரம்: N. K. பதிமநாதன், S S சிதம்பரநாதன், R. கேதீஸ்வரன்,
தவில்: K. R. புண்ணியமூர்த்தி, T. உதயசங்கர், P. முருகதாஸ்
6-30—8-00 பரதநாட்டியம்:
நாட்டியக் கலைமணி செல்வமா M. அருள்மோகன்
நட்டுவாங்கம் — திருமதி சாந்தினி சிவநேசன் (கொக்குவில் கலாபவனம்)
பாட்டு: — S. பத்மலிங்கம்
மிருதங்கம்: — S. மகேந்திரன்
வயலின்: — R. ராதாகிருஷ்ணன்
8-00 — 9-30 எழுச்சிப் பாடல்கள்:
மெல்லிசைவாணர் G. சாந்தன் குழுவினர்

8-2-93 திங்கள் (இரண்டாம நாள்)
நாதஸ்வர இசை:
நாதஸ்வரம்: V. K. கானமூர்த்தி, V. K. பஞ்சமூர்த்தி
தவில்: K. நித்தியானந்தன், N. கணேசன், R. S. சுதாகரன்
இசைக்கச்சேரி:
பொன் சுந்தரலிங்கம் — பாட்டு
R. ராதாகிருஷ்ணன் — வயலின்
S. மகேந்திரன் — மிருதங்கம்
S. துரைராஜா — கஞ்சிரா
சதா வேல்மாறன் — கடம்
இன்னிசை வார்ப்புகள்:
இசையமைப்பாளர் கண்ணன் வழங்கும்

★ மெல்லிசை நிகழ்ச்சி ★

பாடகர்கள்: G. சாந்தன், பொடி, வாண ராமேஸ்வரன, பார்வதி சிவபாதம் மிதிலா விவேகானந்தன், ராதிகா சுப்பிரமணியம்
9 2-93 — 23-2-93 வரை பதினைந்து தினங்கள் "இசைவிழா" நடைபெறும்.
விசேட ஒலி ஒளி:
ஒலி: நித்தி சவுண்ட்ஸ், யாழ்ப்பாணம்.
ஒளி: மஹே லைற், கோப்பாய்.

பொன் சுந்தரலிங்கம்
தலைவர்

வாழ்த்துகிறோம்
**ஹரன் வர்த்தக ஸ்தாபனம்,**
772, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
(ஏ-2739)



எமது உளங்கனிந்த பொங்கல் நல் வாழ்த்துக்கள்

**ஜெயா அழகு சாதன மாளிகை**

177 A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள்
★ மணப்பெண்களின் சோடனை நகைகள்
★ லேஸ் நூல் வகைகள் ★ எவர் சில்வர்
★ பாடசாலை பிரயாணப்பை ★ கைப்பைகள்
★ சிறுவர் விளையாட்டுப் பொருட்கள்

மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு அழகுசாதனப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாவும் பெற்றுக்கொள்ள

**ஜெயா பென்ஸி ஹவுஸ்**

160, நவீனசந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

# தைப்பொங்கல் சிறப்பு மலர்

## தைப்பொங்கல் பண்டிகை தெய்வாம்சம் பொருந்திய திருநாள்

இந்துக்களால் தை மாதம் முதல்நாள், பொங்கல் திருநாளாக காலம்காலமாக கொண்டாடப்படுகிறது. இப்போது இந்நாள் தமிழர் திருநாளாகவும் திருவள்ளுவர் ஆண்டு தொடக்க நாளாகவும் கொண்டாடப்படுகின்றது.

ஓர் ஆண்டிற்குப் பன்னிரெண்டு மாதங்களாகும். மக்களுக்கு ஓர் ஆண்டானது தேவர்களுக்கு ஓர் நாளாகும். அதன்படி தேவர்களுக்கு ஆறு மாதம் பகலாகவும் ஆறு மாதம் இரவாகவும் கருதப் படுகின்றது.

ஜோதிட சாஸ்திரப்படி பன்னிரண்டு மாதங்களும் சித்திரை முதல் பங்குனி வரை பன்னிரண்டு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. அது போல ராசிகளும் பன்னிரெண்டாகும். அவை மேஷம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் ஆகும்.

இந்து மக்களால் சூரியபகவான் என வழிபடும் சூரியன் ஆறு மாதங்கள் தெற்கில் இருந்து வடக்கு நோக்கியும் (உத்தராயணம்) பின்னர் ஆறு மாதங்கள் வடக்கில் இருந்து தெற்கு நோக்கியும் (தட்சிணாயம்) பயணப்படுவதாக ஆகமங்களும் ஜோதிட நூல்களும் கூறுகின்றன. அதனை இப்போது விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

தை மாத சங்கராந்தி தை மாத முதல் நாளன்று சூரியன் தனுசு ராசியிலிருந்து மகரராசிக்குள் நுழைகின்றார். அந்த திருநாளே தைமாதப் பிறப்பு என்றும் ''மகரசங்கராந்தி'' யென்றும் குறிப்பிடப்படுகின்றது. அதனையே இன்று நாம் தைப்பொங்கலாக அனுஷ்டிக்கின்றோம்.

இந்துக்கள் எந்த நல்ல காரியத்தையும் அதுவும் விடியற்காலையில் செய்வதை சிறப்பாகக் கருதுவார்கள். சூரிய உதயத்தின்போது செயல்படுத்துகின்றார்கள்.

ஐயா சச்சிதானந்தம்

பொங்கலன்று அதிகாலையில் எழுந்து குளித்து சூரியனை நோக்கி வீட்டின் வாயிலுள் பொங்கலிடுகின்றோம். தரையில் வண்ணகோலமிட்டு திருவிளக்கை ஏற்றி அதன் முன் பூ, பழம், வெற்றிலை, பாக்கு, தேங்காய், தோகையுடன் கூடிய கரும்பு, மஞ்சள் படையல்செய்து படைக்கின்றோம். தூய மண் அடுப்பில் பொங்கலும், சர்க்கரைப் பொங்கலும் இட்டு சூரிய உதயத்தில் சூரியனுக்குப் படையல் செய்து வணங்குகின்றோம். தேவர்களுக்கு பகல் தொடங்கும் நாளான இந்நாளில் நமக்கு நல்ல பலன்களை அளிக்கும் ஆண்டாக விளங்கவே இதனை நாம் செய்கின்றோம்

சூரியபகவானை இந்துக்கள் மட்டுமன்றி சீனர், ஜப்பானியர், பாரசீகர்கள் ஆகியோரும் கூட அவரவர் வழியில் வழிபட்டு வருகின்றனர், பொங்கல் இட்டும் அதனை கொண்டாடுகின்றனர். சைவ ஆலயங்களில் சூரியனின் இதயத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருந்து ஆன்மாக்களுக்கு அருள்பாலிப்பதாகக் கூறுகின்றனர். இதனால் தைப் பொங்கல் பண்டிகை தெய்வாம்சம் பொருந்திய திருநாளாக இந்துக்களால் அனுஷ்டிக்கப்படுகிறது. (எஸ்)

## சூரியனுக்கு விழா எடுக்கும் உழவர் திருநாள் இன்று

இன்று தைப்பொங்கல் திருநாள். உழவர் பெருநாள் தமிழர்களின் தனிச்சிறப்பு மிக்க நன்நாள். உலகை உய்விக்கும் உழவர் பெருமக்கள் இன்று உதயசூரியனுக்குப் பொங்கலிட்டு தம் நன்றிக் கடனை செலுத்துகின்றனர்.

எஸ். கே. யோகநகதன்

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற பண்புக்கு (6-ம் பக்கம் பார்க்க)

## உழவர் திருநாள்...

கருணை ததும்பும் மனத் தோனுய்
கார்முகில் நிறைத்து மழை பொழிந்து
பெரு வியர்வைகள் சிந்திடும் அலவர்
பொருள் சிறந்தோங்கப் பயிர் வளர்த்து
வருணன் வறுமை தகர்த்து உலகை
வாட்டும் பசித்துயர் போக்கிய நன்றித்
திருநாள்! ஏரின் உலகம் போற்றும்
பெருநாள் பொங்கல் தமிழர் திருநாள்

பாலும் செந்நெல் அரிசிப் புகர்வு
பழங்கள் சேரப் படைத்தே பரிதி
தாழில் இறைஞ்சித் தொழுகும் உழவர்
தோழனுய் இணைந்த காளையின் உழைப்பை
வாழ்த்தி மகிழ்ந்து வைகறைப் பொழுதில்
வாழ்வின் இன்பம் வேண்டித் துதிக்க
ஆழ்த்தும் துயர்கள் அகன்றே அகிலம்
அன்பில் திளைக்கும் உழவர் திருநாள்.

— நெடுந்தீவு லக்ஸ்மன்.

பொங்கலோ பொங்கலோ என
உரக்கக் கூறி பொங்கிடுவோம்......
மங்களம் பொங்கும்

பொங்கல் வாழ்த்துக்கள்

ஆங்கில மருந்து வகைகளை
தேவையறிந்து நியாய விலையில்
விற்பனை செய்த நிறுவனம்


எஸ்ரி. மெடிக்கல்ஸ்
(ஆஸ்பத்திரி முன்)
யாழ்ப்பாணம்.

## எல்லா நாளும் எழிலாய் வாழ்வோம்

கையது பற்றிக் கடிமணம் காணும்
கனவது பூவாய்ப் பூத்துக்குலுங்க
தையது பிறந்தால் வழியது பிறந்து
தம்மணம் வாழ்வில் கூடிடும் என்ற
தையலர் நாளும் மங்கலம் பொங்கத்
தன்மனம் கிளர்ந்தே மகிழ்ந்து குலாவத்
தையவள் வந்தாள் பல்வளம் தந்தாள்
தரணியில் நலமெலாம் நனிசிறந்திடவே.

உழவர் வாழ்வில் ஏற்றம் கொடுத்து
உலகிற் கெல்லாம் உணவுமளித்துத்
தளர்வில் லாமல் எங்கும் வளங்கள்
திகழ்ந்து செழிக்கச் செய்வோனை
உமிழும் சுடரொளிக் கதிரோன் தனக்கு
உவந்தே எங்கள் இதயத் திருந்து
எழுந்த நன்றியில் பொங்கிப் படைத்து
எல்லா நாளும் எழிலாய் வாழ்வோம்.

- நாயன்மார்கட்டு இ. குகதாசன்.



ஏழ்மையில் வாழுகின்ற உழவர் வாழ்வில்
ஏற்றத்தைத் தந்திட்ட இயற்கை தன்னை
வாழ்த்தி நாளும் வணங்கிடவே வேண்டுமென்று
வளமுடனே வைக்கின்றேம் இன்பப் பொங்கல்.

உள்ளூரில் உற்பத்தியாகும் சோப்பை
உவந்துமே உபயோகத்தில் கொள்வோமென்று
இன்றே நாம் பிரதிக்ஞை ஏற்றுக் கொள்வோம்
எந்நாளும் இதனை நாம் காத்தும் கொள்வோம்

"மில்க்வைற்"

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம். நாடும் செழிப்புற விவசாயிகள் கரம் உயர்ந்திட
அனைவருக்கும் இனிய

பொங்கல் வாழ்த்துக்கள்!

எங்கள் மண்ணில், திருமணம் மற்றும் சுபகாரியங்களுக்கு
பட்டு பருத்தி உயர்ரக பிடவைகளுக்கும்
காலத்திற்கு ஏற்ற பிளவுஸ் துணிகளுக்கும் பெயர்பெற்ற ஸ்தாபனம்

சீமாட்டி
(ஜவுளிகள் சமுத்திரம்)

122, மின்சாரநிலைய வீதி,
(மேல் மாடி)
யாழ்ப்பாணம்.

# கலைஞானி அரும்பொருட்காட்சிமன
# ஆகியவற்றைப் பேணி பா

## தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்

எம்மவர், கலாச்சாரம், பண்பாட்டைப் பிரதிபலிக்கும் தொல்பொருட்கள், அரும் பொருட்களை வலிதின் முயன்று பெரும் பொருட் செலவில் சேர்த்தார் ஓர் பெருந்தகை. வாழும், வரவுள்ள சந்ததியினர் இவற்றால் பயன்பெறவென அறக் கட்டளை மூலம் வகை செய்துள்ளார் அம்மா மனிதர்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் வரிசையில் முன்இடம் பெறுகிறார் இப் பெரியார் கலைஞானி என்போம் நாம்.

**க. கனகராசா J.P.**

இத்தரை சகலருமறிய, யாழ்ப்பாணம் குரும்பசிட்டி வாசியும், "கலைஞானி" என்ற கௌரவப் பெயரால் பொது மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டவனுமாகிய அரிய குட்டி செல்வரத்தினம் ஆகிய நான் எனது பதினைந்தாவது பிராயத்திலிருந்தே கலைப்பணியிலும், தமிழர் பாரம்பரியத்தையும் நாகரீகத்தையும் வெளிப்படுத்தும் தொல் பொருட்கள், புராதனச் சின்னங்கள், பழைய நூல்கள் ஏட்டுச் சுவடிகள், ஆகியவற்றைச் சேகரிக்கும் பணியிலும், என்னை ஈடுபடுத்திக் கொண்டு பிரமச்சாரியாக வாழ்ந்து, அறுபது வயதை அடைந்து விட்ட இவ்வேளையில், நான் சேகரித்து வைத்த இப்பொருட்கள் தமிழ் மக்களுக்கு சந்ததி சந்ததியாகப் பயனளிக்க வேண்டும் என்று நான் விரும்புவதாலும், எனது சீவிய காலத்துக்குப் பின்னர் நான் செய்து வந்தது போலவே இப்பணிகள் அக்கறையுடன் தொடரப்பட வேண்டுமென்று நான் ஆசைப்படுவதாலும், என்னால் கடந்த 45 வருடங்களாகச் சேகரித்து வைக்கப்பட்ட பல இலட்சங்கள் பெறுமதியான கலைப்பொருட்கள், பழைய நூல்கள், ஏட்டுச் சுவடிகள், கற்சிலைகள், களிமண் வேலைப்பாடுகள், செங்கல் படிவங்கள், நாணயங்கள், மரவேலைப்பாடுகள் யாவற்றையும் இத் தைப்பொங்கல் திருநாளில் நல்லைக் கம்பன்கோட்டமண்டபத்தில்கூடியிருக்கும்சான்றோர்கள் முன்னிலையில் தமிழ் மக்களுக்கு அர்ப்பணித்து, பின்வரும் கட்டுப்பாடுகளைக் கொண்ட இவ் அறக்கட்டளையை இயற்றி உறுதி சாதனப்படுத்துகின்றேன்.

### 01 பெயர்:

இவ் அறக்கட்டளையின் பெயர், "கலைஞானி அரும் பொருட்காட்சி மண்டபம், நூல் நிலையம், சித்திரக்கூடம், ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் அறக்கட்டளை" எனப்படும் சுருக்கமாக, "கலைஞானி அறக்கட்டளை" என வழங்கும்.

### 02 எனது நோக்கங்கள்:

(அ) என்னால் இன்று தமிழ் மக்களுக்கு அர்ப்பணிக்கப்படும் பொருட்கள்யாவும் யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் ஒரு நிரந்தரமான மண்டபத்தில் பொதுமக்களின் பார்வைக்குக் காட்சிப் பொருட்களாக வைக்கப்படவேண்டும்.

(ஆ) எனது சீவிய காலத்துக்குப்பின் கலைப்பொருட்கள், தொல்பொருட்கள், பழைய நூல்கள், ஏட்டுச் சுவடிகள் ஆகியன தொடர்ந்தும் சேகரிக்கப்பட்டு அம்மண்டபத்தில் காட்சிப் பொருட்களாக வைக்கப்படவேண்டும்.

(இ) பழைய நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும், நூல் நிலைய மண்டபம் ஒன்று அமைத்து அதில் பொதுமக்களின் பாவனைக்காக வைக்கப்படுவதோடு நாளாந்தசெய்தித் தாள்களையும், சஞ்சிகைகளையும் பொதுமக்கள் வாசிப்பதற்கான வசதிகள் செய்யப்படவேண்டும்.

(ஈ) சித்திரக்கூட மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அம்மண்டபத்தில் தமிழ்த் தொண்டு, சமயத் தொண்டு, பொதுத் தொண்டு, கலைஞர்கள், கவிஞர்கள், ஆய்வாளர்கள், வைத்தியர்கள், சோதிடர், ஞானிகள், யோகிகள் ஆகியவற்றில் ஈடுபட்டு வாழ்ந்து மறைந்துபோன சான்றோர்களின் உருவப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படவேண்டும்.

### 03 அறங்காவலர் குழு

எனது நோக்கங்களைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு பின்வரும் பெரியோர்கள் எனது வேண்டுகோளுக்கிணங்கியமைக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்து அவர்களை அறங்காவலர்களாக நியமிக்கின்றேன்.

(1) நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர்
(2) சைவப்பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம், ஏழாலை.
(3) செந்தமிழ் செல்வி. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, தெல்லிப்பழை.
(4) வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம், யாழ்ப்பாணம்.
(5) கலாநிதி க. கனகராஜா, ஜே. பி. (மில்க் வைற்)
(6) கலாநிதி எஸ். ஜெபநேசன், அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை
(7) திரு. அ. குமரகுரு, ஜே. பி. யு. எம். வழக்கறிஞர்.
(8) திரு. சி, நடராசா. வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்,
(9) திரு.ஏ ரி.பொன்னுரை, குரும்பசிட்டி.
(10) திரு. சு. பொ. நடராசா உரிமையாளர் "அண்ணா" தொழிலகம்.
11. திரு. க. சி. குலரத்தினம், பல்கலைப்புலவர் அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
12. திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம், புலவரகம், மயிலணி, சுன்னாகம்.

(அ) இவர்களில்முதலாமவர் தலைவராக செயற்படுவார். எனது சீவிய காலத்தில் அவருக்கு எக்காரணத்தைக் கொண்டாவது தலைவராக செயற்பட இயலாத நிலை ஏற்படுமாயின், அவருடைய இடத்திற்கு நான் பிறிதொரு நியமனஞ்செய்யலாம்.

[ஆ] எனது சீவிய காலத்துக்குப்பின் தலைவராகப்பணி புரிபவரால் செயற்பட இயலாத நிலைமை ஏற்படுமாயின் ஏனைய அறங்காவலர்கள் அவ்விடத்துக்கு ஒருவரை நியமிப்பர்.

[இ] அறங்காவலர்களில் ஒருவர் சட்ட அறிஞராகஇருப்பார். இவர் செயற்பட இயலாதநிலைமை ஏற்படுமாயின் தலைவர் இவருடைய இடத்துக்கு சட்ட அறிஞராகவுள்ள வேறொருவரை நியமிப்பார்.

(ஈ) அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றும் பணிகள் தொடர்பான எவ்விடயத்திலும் அறங்காவலரின் முடிவே இறுதியானதாயிருக்கும், ஏகமனதாக முடிவு எடுக்க இயலாத பட்சத்தில் தலைவரும், பெரும்பான்மை அறங்காவலர் உறுப்பினரும் சேர்ந்து எடுக்கும் முடிவே இறுதியானதாயிருக்கும்.

[உ] இவ் அறக்கட்டளையை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்படும் ஊழியர்களின் நியமனம் ஒழுங்காற்று நடவடிக்கை ஆகியவற்றுக்கு அறங்காவலர்குழுவே பொறுப்பானதாய் இருக்கும். அவ்வப்போது தேவைகட்கேற்ப அறங்காவலர் குழு ஊழியர்களை நியமிக்கலாம்.

### 05 தலைவரின் கடமைகள்

தலைவர் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதோடு இவ் அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான சகல பணிகளையும் வழிநடத்துபவராயிருப்பார். கூட்டங்களுக்கு தலைவரால் தலைமை தாங்கமுடியாதவிடத்து அறங்காவலர்களில் ஒருவரை தலைமை தாங்குவதற்கு நியமிப்பார்.

### 05. செயலாளரின் கடமைகள்

தலைவர் அறங்காவலர்களில் யாராவது ஒருவரை அறங்காவற்குழு அங்கத்தவர்களின் விருப்பத்தோடுசெயலாளராக நியமிப்பார். செயலாளர் கூட்டங்களுக்கு அழைப்பாளராக பணிபுரிவதோடு அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றும் பணிகளில் தலைவருக்கும், ஏனைய அறங்காவலர்களுக்கும் செயற்தொடர்பு ஏற்படுத்துபவராகவும், பணிகளை நெறிப்படுத்துபவராகவும் செயற்படுவார்.

### 06. பொருளாளரின் கடமைகள்

தலைவர் அறங்காவலர்களில் யாராவது ஒருவரை அறங்காவற்குழு அங்கத்தவர்களின் விருப்பத்தோடு பொருளாளராக நியமிப்பார். பொருளாளர் அறக்கட்டளையின் நிதி, சொத்துக்கள், காட்சிப் பொருட்கள் யாவற்றையும் பாதுகாக்கும் பொறுப்புக்களோடு, களஞ்சியப் பொறுப்பாளரின் பணிகளையும் மேற்பார்வை செய்வார்.

### 07. ஆலோசனைச் சபை

அறங்காவல் குழுவுக்கு ஆலோசனை கூறுவதற்கு ஒவ்வொரு வருடமும் தைமாதத்தில்நடைபெறும். பொதுக் கூட்டத்தில் அறங்காவல் குழு பத்துப்பேரைத் தெரிவு செய்யும்.

### 08 சித்திரக்கூட மேற்பார்வையாளர்

ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சித்திரக் கூட மேற்பார்வையாளராக ஐவர் நியமிக்கப்படுவர். இவர்களும் ஆலோசனைச்சபை உறுப்பினர்களாக இருப்பர்.

### 09. பொதுக்கூட்டம்

ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் தலைவர் இவ் அறக்கட்டளையின் செயற்பாடுகளில் அக்கறையுள்ள பொது மக்களை அழைத்து ஒருபொதுக் கூட்டத்தை நடத்துவார். அக் கூட்டத்தில் இவ் அறக்கட்டளைகளின் பணிகள் பற்றிய வருடாந்த அறிக்கையை செயலாளர் சமர்ப்பிப்பார். பொருளாளர் அறக்கட்டளையின் நிதி பற்றியும், கடந்துபோன வருடத்தின் வரவு-செலவுகள் பற்றியும், சொத்துக்கள், பொருட் பதிவேட்டில் உள்ள பொருட்கள் பற்றியும், ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார். இவ்வறிக்கை முறைமையாகக் கணக்காய்வு செய்வதற்கான அத்தாட்சிப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

### 10. நிதியும் சொத்துக்களும்

இவ்அறக்கட்டளையின் நிதிக்கும், சொத்துக்களுக்கும் அறங்காவல் குழுவே பொறுப்புடையதாயிருக்கும். சட்டபூர்வமான பத்திரங்களிலும் வங்கியில் பணம் பெறும் காசோலைகளிலும், உத்தியோகபூர்வமான சொத்துப் பத்திரங்களிலும், தலைவர் உட்பட முதல் மூன்று அறங்காவலர்கள் கையொப்பமிடுவது போதுமானதாவும், சட்டபூர்வமானதாகவும் இருக்கும், உறுதிகள், பத்திரங்கள் யாவும் "கலைஞானி அறக்கட்டளை" என்ற பெயரிலேயே பதியப்படும். வங்கிக் கணக்குகளும் அவ்வாறே 'கலைஞானி அறக்கட்டளை' என்ற பெயரிலேயே திறக்கப்பட்டு நடைமுறையில் இருக்கும். இவ் அறக்கட்டளையின் நிதி எந்த வங்கியில் அல்லது வங்கிகளில் வைப்பிலிடப்பட வேண்டுமென்பதை அறங்காவல் குழுவே தீர்மானிக்கும்.

### 11. ஆரம்பநிதி

இவ் அறக்கட்டளையை நிர் ... வகிப்பதற்கான ... யாக நான் ... ரூபாவை (ரூபா ... இன்று அறங்காவ... தலைவரிடம் ஒப்... றேன். இப்பணம் ... வல் குழு தெரி... வங்கியில் நடைமுறை... கில் வைப்பிலிடப்...

### 12. நிதி சேகரித்...

அறங்காவல் குழு... எழுத்துமூலம் அனு... எவராவது அற... வகிப்பதற்கு பணம் ... வழங்கலாம். அப்... ரிக்கப்படும் பணத்... னடியாகப் பற்றுச்...




### ★ கலைஞானி அ...

### கலைஞானி ... மக்களு...

'கலைஞான... களாகச் சேகரி... பெறுமதியான... ஏட்டுச் சுவடிகள்... பாடுகள், செங்... வேலைப்பாடுகள்... கல் திருநாளில்... மண்டபத்தில் ... யில் தமிழ் ம... கட்டளை இயற்...

---

## தேன்போல் வைத்தீர் தெரிந்து

காலத்தாற் தேடிய கலைப்பொருளத்தனையும்
சால உவந்தளிக்கும் ஞானியே—காலத்தாற்
காண்பார் வியக்கக் கலைக்கூடக் காட்சியாய்த்
தேன்போல் வைதீர் தெரிந்து.

—பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன்

# ...ண்டபம், நூல்நிலையம் சித்திரகூடம் ...ாதுகாக்கும் அறக்கட்டளை



கட்டளையின் பொருட்களை கண க்ா ணிப் ப த ற கு ம பே ணிப் பா து காப்பதற் கும் ஒரு களஞ்சியப் பொறுப பாளர் நியமிக்கப்படுவார். இவர் பொருளாளர்ன் நேரடி மேற்பார்வையில் பணிபுரி வார் இவரது வேதனம், ஒழுக் காற்று நடவடிக்கை ஆகிய வற்றுக்கு அறங்காவல் குழு பொறுப்பாக இருக்கும்.

**15. கலைஞானி நினைவுச் சொற்பொழிவு**

எனது சீவிய காலத்துக்குப் பின் வருடாந்தம் தை மாதத் தில் நடைபெறும் பொதுக கூட்டத்தில் கலைஞானி நினை வுச் சொற்பொழிவு என்ற தலைப்பில் கலை, தமிழர் நாகரீ கம் தமிழர் பாரம்பரியம், இந்து சமயம், சைவசித்தாந் தம், ஆகிய விடயங்களில் ஏதாவதொரு விடயத்தில் தலைகமை பெற்ற ஒரு அறி ஞரை அழைத்து சொற பொழிவு நடத்தப்படவேண் டும் அவருக்குரிய சன்மானம் பிரயாணச் செலவு ஆகியன அறக்காவல் குழுவின்தீர்மான ப்படி வழங்கபபடும்.

**16. கணக்குப் பரிசோதகர்**

இவ் அறக்கட்டளையின் வரவு செலவு கணக்குகள் யாவும் ஒரு தகுதி வாய்ந்த கணக் காளரால் பரிசோதிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் நடைபெறும் பொதுககூட்டததில சமர்ப் பிக்கப்படவேண்டுப்.

**17. அறக்கட்டளையைக் கலைத்தல்**

இவ் அறக்கட்டளையில் குறிப் பிட்ட எமது நோக்கங்களை நிறைவேற்றமுடியாதநிலைமை ஏற்படும் படசத்தில்:

அ) நல்லை திருஞான சம்பந்த ஆதீனத்தலைவரின் விருப் பத்திற்கமைய பொது மக்களுக்குப் பயன்படக் கூடிய வகையில் இப் பொருட்கள் யாவும் பயன்படுத்தப்படவேண் டும்.

அல்லது

ஆ) குரும்பசிட்டிப் பொது மக்களின் விருப்பத்தின் படி அவ்வூரில் உள்ள ஒரு பொதுப்பணி மன் றின் மூலம் இப்பொருட் கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

அல்லது

இ) வட்டுக்கோட்டையாழ்ப் பாணக்கல்லூரி நிர் வாகிகள் இப்பொருட் களை பொதுமக்களுக்கு பயன்படக்கூடிய வகை யில் பொறுப்பேற்று ஆவன செய்யவேண்டும்,

இம்மூன்று வழிகளில் எது சிறந்தது என்பதை அறக்கட் டளை நிர்வாகங்களுக்குப் பொறுப்பான மாவட்ட நீதி மன்றத்தின் தீர்ப்பை அறங் காவல்குழு பெற்றபின்னரே. அம்மன்றின் தீர்ப்பின்படி இப் பொருட்கள், நிதி சொத்துக் கள் யாவும் கையளிக்கப்பட வேண்டும்.

'கலைஞானி'

அ. செல்வரத்தினம்,
11/7, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் வாழ்த்துரை

கலைஞானி அறக்கட்டளை ஒன்றை நிறுவுகின்ற ஒரு வாய்ப்பை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். மெய்யாய் இருந்தது நாட் செல நாட் செல வெட்டை வெறும் பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்லப் போகும் நிலை யிலிருந்து எமது பாரம்பரியம், கலை, பண்பாடுகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை இன்றியமையாதது 'கலைஞானி' அரும் பொருட் காட்சி மனை ஒன்றும் நூல் நிலையம், சித்திரக் கூடம் ஆகியனவும் இந்த அறக்கட்டளையினால் அமைவதை நாம் பெரிதும் வரவேற்கிறோம். இந்த நன்முயற்சி கைகூட அனைவரும் ஒத்துழைப்பு நல்குவோமாக.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## ... அறக்கட்டளை ★

...ான ஆரம்ப நிதி ... பத்தாயிரம் (ரூபாய் 10,000) ...ங்காவல் குழுத் ...ஒப்படைக்கின் ...பணம் அறங்கா... தெரிவு செய்யும் ...டைமுறைக் கணக் ...லிடப்படும். கப்பட்டு கணக்கில் சேர்க்கப் பட்டதற்கான அத்தாட்சிப் பத்திரம் உரியவர்க்கு பொரு ளாளரால் அனுப்படல் வேண்டும்.

**13. பொருளேடு**

இவ் அறக்கட்டளையின் அசைவுள்ள அசைவற்ற

## ...ஞானியின் கலைப்பொருள்கள் ...க்களுக்கு அர்ப்பணிப்பு

...லஞானி' அவர்களால் கடந்த 45 வருடங் ... சேகரித்து வைக்கப்பட்ட பல இலட்சங்கள் ...டியான கலைப்பொருட்கள், பழைய நூல்கள் ...வடிகள், கற்சிலைகள், களிமண் வேலைப் ... செங்கல் படிவங்கள், நாணயங்கள், மர ...ாடுகள் யாவற்றையும் இத்தைப்பொங் ...நாளில் இன்று நல்லை கம்பன் கோட்ட ...த்தில் கூடியிருக்கும் சான்றோர் முன்னிலை ...மிழ் மக்களுக்கு அர்ப்பணித்து இவ் அறக் ... இயற்றி உறுதிசாதனப்படுத்தப்படுகிறது

...சேகரித்தல்

...வல் குழு தலைவரின் ...ம் அனுமதிபெற்று ...அறக்கட்டளை நிர் ...பணம் சேகரித்து ... அப்படிச் சேக ...பணத்துக்கு உட் ...ற்றுச்சீட்டு வழங் சொத்துக்கள் யாவற்றுக்கும் முறையான பொருட் பதி வேடு தயாரிக்கப்பட்டு வருடா வருடம் புதிப்பிக்கப் படவேண்டும்.

**14. களஞ்சிப் பொறுப்பாளர்**

அறங்காவல்குழுவினால் அறக்

## கலைஞானியின் முயற்சி அளப்பரியது

அன்பர் கலைஞானி அவர்கள் சேகரித்த கருவூலங் களைப் பேணிப் பராமரிக்க ஒரு அறங்காவற்குழு அமைக்கப்பட்டதனைக் கேள் வியுற்று மகிழ்ச்சியுற்றேன். நமது நாட்டின் பாரம்பரி யங்கள் காப்பாற்றப்படவேண் டியவை. இந்த வகையில் நம் முன்னோர் உருவாக்கிய நூல் கள், சிற்பங்கள், ஓவி யங்கள் என்பன மிக வும் முக்கியமானவை. நமது பிரதேசத்தில் தரமான நுண் பொருட்காட்சிசாலை இல்லா திருப்பது பெருங்குறையேயா கும். மேலை நாடுகளிலும் இந் தியாவிலும் ஒரு பெரியாரை நினைவுகூர அரசாங்கம் எவ்வ ளவோ செய்கின்றது அப் பெரியார் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கி அவருடைய நினைவு என்றும் பசுமையாக இருக்க வழிஅமைக்கின்றது நமது நாட்டில் எத்தனை பெரி யார்கள வாழ்ந்து மறைந்து விட்டனர். ஒருசில வரலாற்று ஆர்வலரைத் தவிர அவர்களைப் பற்றி யாருக்குமே தெரியாது. இத்தகைய சூழலில் கலைஞானி யின் முயற்சி போற்றற்குரி யது. நாட்டபிமானம் உள்ள ஒவ்வொருவனும் கலைஞானி க்கு வந்தனை செய்யவேண் டும்.

எஸ் ஜெபநேசன்
அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை

## பாராட்டு

ஒரு பேரரசன், கலை ஆர்வம் படைத்தவனாக இருந்திருந் தால் செய்திருக்கக்கூடிய கலைப்பெரும் பணியை ஒரு தனி மனிதன் தமிழ் ஈழத் தில் செய்திருக்கிறார். இது இந்த மண் பெருமைப்படக் கூடியதாகும். அதே நேரத் தில் கலைஞானி அவர்களின் கலைத்தொண்டை இத்தனை காலமும் தெரிந்து போற்று மையும் வருத்தத்துக்கு உரி யதே.

இனி எதிர்காலத்தின் சிறப்பு அறங்காவலர் குழுக் கலைப் பொக்கிஷத்தைக் கையேற்கிறது என்று அறியும் போது ஒளிவிடுகிறது. காலத் தால் மறையாத பெருமையை காட்டி நிற்கும் பொக்கிஷம் எம் இனத்தின் சொத்து காத்தல் போற்றல் தமிழ் இனத்தின் கடன்.

முன்வந்த பெரியோர் வணக்கத்துக்கும் பாராட்டுக் கும் உரியவர்கள்.

க. சிவராமலிங்கம்

## ஆசியுரை

அருளோங்கும் மெய்யன்பர் களே உயர்திரு கலைஞானி அவர்களின் தொல்பொருள், மூலிகைவகைகள் ஆதியனவற் றின் சேகரிப்பைக் கண்டோம். இவற்றைச் சேகரிக்க எத்துணை பொறுமை, பெருமுயற்சி எடுக்கவேண்டும் என்பதனை எண்ணி வியந்தோம், வருங் கால சந்ததியினரின் ஆய்வுக் கும் அறிவு வளர்ச்சிக்குமான களஞ்சியம் எனலாம். கலை ஞானி என்ற புகழாரத்தை ஐயமின்றி நிரூபித்துவிட்டார். வளர்க அவர் தொண்டு. இறை யருள் முன்நிற்க அவர் நலமே நீடுவாழவேண்டுமென ஆசீர் வதிக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ
குருமஹாசந்நிதானம்
நல்லை ஆதீனம்

## அரும்பொருள் காக்கும் அரும்பணி வளர்க

கலைஞானியால் சேகரிக்கப் பட்ட அரும் பொருட்களை பொறுப்பேற்கும் அறங்காவல் குழுவினர் சமூகப்போறுப் போடு செயற்படுகின்றனர். இப்பணியை விரித்துத் தொடர அத்தனை தமிழ் மக்க ளும் தம்மாலான ஆதரவை நல்கவேண்டுமென வேண்டி இப்பணி சிறப்படைய இறை வனைப் பிரார்த்திக்கிறேன்.

இ. ஜெயராஜ்,
அமைப்பாளர்,
அகில இலங்கை
கம்பன்கழகம்

## கலை ஞானியின் நற்பண்புகளை நெறிப்படுத்த வேண்டும்

தமிழர் நாகரீகத்தின் தொன்மையினையும் செம்மை யினையும் செம்மைந்த மேன் மையினையும் உலகறியாமற் போய்விட்டதேன்? எகிப்திய சுமேரிய பபிலோனிய நாகரி கங்களுக்குநிகராக மேதகுநிலை யிலேயே தொன்மைவாய்ந்த நாகரீகமாகத் திகழ்ந்த தமி ழர் நாகரீகத்தை உலகங் கண்டு கொள்ளாததேன்? இந்துநதிப் பள்ளத்தாக்கினை அலங்கரித்த உன்னத நாக ரீகம் திராவிடர்களையே சாருவ தாக ஆராய்ச்சியாளர்கள் சான்றுகள் பகன்றபோது நாம் தூங்கிக்கொண்டிருந்து விட்டோம் நம்முன்னோர்கள் எமக்காக விட்டுச்சென்ற சங்க நூல்களை வைத்துக்கொண்டு பழம்பெருமை பேசுகிறோம். தொல்காப்பி யத்தின் எழுத்ததிகாரம் சங்ககால இலக்கியங்களுக்கு முற்பட்டதெனின் அது பாணி யத் (வடமொழி இலக்கணம்) துக்கும் முற்பட்டதன்றோ? 2300 ஆண்டுகளுக்கு முன்னர் மொழிக்கு இலக்கண வரம் பினை வகுக்குமளவுக்கு நாக ரீகமடைந்திருந்த தமிழினம், வீரத்தையும், காதலையும். பாடிக்கொண்டிருந்து விட் டதா? உலகறிஞர்கள் வியக் கின்ற தனித்தன்மையுள்ள சைவசித்தாந்தத்தைப் பெற்ற தமிழினம் இன்று நலிவுற்ற தேன்.? எமது சொந்த அர சாட்சிகளை நாம் இழந்துவிட் டது மாத்திரமல்ல எமது முன் னோர் கலைஞானியின் கண்ணோக்கில் எமது நாகரீக சின்னங்களைப் பின்சந்ததி யினர் பார்ப்பதற்கென்று சேக ரிக்காது விட்டதும் ஒரு கார ணமே. தங்களால் இயன்ற ஆதரவை கலைஞானிக்கு நல்க வேண்டுமென்றும், அறிஞர்கள் அவருக்கு அறிவுரைகள் வழங்கி அவருடைய நற்பணி களை நெறிப்படுத்த வேண்டு மென்றும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அ. குமரகுரு
காங்கேசன்துறை.

இசையோடு இனிய பொங்கல் மலர்ந்திட
நதியா நகைகள் இசையொலி பொலிந்திட
அனைவருக்கும் மங்கள பொங்கல் வாழ்த்துக்கள்!...

காலத்தால் அழியாத கண்கவர் இருபத்திரண்டு
கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன்
வழங்கும் ஒரே நிறுவனம்......

**நதியா நகை மாளிகை**

(ஸ்ரான்லிவீதிச் சந்தி)
இல. 02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(உங்கள் ஆதரவிற்கு நன்றி)

எங்கெங்கு நோக்கினும் அங்கெல்லாம் பொங்கலோ
பொங்கலென வாழ்த்தொலி கேட்கின்றது
இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

திருமணம் மற்றும் சுபகாரியங்களுக்கு
முகூர்த்த பட்டுப் பிடவைகளுக்கு கைராசியான நிறுவனம்

**கணேசன் ஸ்ரோர்ஸ்**

(ஜவுளிகளின் சாம்ராச்சியம்)
63, 78, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

## சூரியனுக்கு விழா எடுக்கும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்ப இன்று இந்துக்கள் வாழும் எல்லா இடங்களிலும் புத்தொளியும், புதுத் தெம்பும் பொங்கிப் பூரிப்பது வழமை. இயற்கையைத் தெய்வமாகக் கருதி வழிபடுபவர்கள் இந்துக்கள். அவ்வழியிலேயே வரண்ட பூமியை வளம்கொழிக்கும் சொர்க்கபுரியாக மாற்றும் வற்றா நீர் ஊற்றுக்களையும், நீண்ட நதிகளையும் தெய்வமாகக் கண்டனர். உழவர் பெருமக்கள் பசுமை பெருகவும், பயிர்கள் செழிக்கவும் பங்களிப்பு நல்கும் உதயசூரியன் அவர்களின் தொழிற் தெய்வம். நெற்றி வியர்வை நிலத்திற்குச் சிந்திய சிரமத்திற்கு பிரதி உபகாரமாக பூமித்தாய் நெல் மணிகளாகக் கொட்டிக் குவித்துவிட்டாள். காலமெல்லாம் உழைத்துப் பாடுபட்ட வேளாண்மை பெரும் பயனைத் தந்ததால் உழவர் பெருமக்கள் மனதிலும் மகிழ்ச்சி பெருகுகின்றது. பயிர்கள் செழிப்பதற்கு உறுதுணையாக இருந்த சூரியனுக்கு நன்றி செலுத்தும் வகையிலேயே தமது நிலத்தில் விளைந்த நெல்லைக் குற்றி அரிசியாக்கிச் சூரியபகவானுக்குப் பொங்கலிடுகின்றனர். உழவர் தரும் உணவில் தான் நாம் வாழ்கின்றோம். அவனது உதவிக்கு நாம் நன்றி கூறவேண்டாமா? என்று ஏனைய மக்களுக்கு உணர்வு உண்டாகிறது. உழவனுக்கும், அவனுக்கு உதவிய சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கின்றனர்.

தாமும் இல்லங்கள் தோறும் இனிய பொங்கலிட்டு உழவன் உழைப்புக்கு உதவுமாறு சூரியனை இறைஞ்சுகின்றனர். அதனால் தைப்பொங்கல் பெருநாள் தமிழர் தேசிய நாளானது. தமிழர்கள் தங்கள் தம் இல்லங்கள் தோறும் பொங்கலிட்டுத் தங்கள் இதயத்தின் பொங்குதலைப் பிரதிபலிக்கும் நாளானது அவர்களின் நன்றி உணர்வுப் பண்பாட்டை எடுத்தியம்புவதாக அமைந்தது. அவர்தம் ஆன்மீக வழி சார்ந்த வாழ்வின் சிறப்பைப் புகழ்வதாகவும் அமைகிறது. மார்கழி மாத மழையாலும், இருளாலும், பனிப்படலங்களாலும் மறைந்து கிடந்த கதிரவன் தை முதல் நாளில் இருந்து தனது தங்கக் கிரணங்களை நீட்டிக் கொண்டு வெளிக் கிளம்புவான். அந்தக் காலத்தில் அவனது நல்வருகை கண்டு மக்களின் உள்ளம் மகிழ்ச்சிப்பிரவாகத்தால் துள்ளும். ஈற்றில் அதுவே பொங்கல் விழாவாக பொலிவுறுகின்றது. உலகிற்கு உயிர்ப்பை ஊட்டுபவன் ஆதவன். ஆதவன் இன்றேல் அவனியே இல்லை எனலாம். கடந்த கால சோதனைகள், துயரங்கள் இழப்புகளை இலகுவில் மறந்துவிட முடியாது. இன்றைய காலைப் பொழுதிலாவது எமது இன்னல், இடர், துன்பம் என்பன நீங்கித் தலைசிறந்த வாழ்வைத் தரவேண்டும் என சூரியபகவானையும், குலதெய்வங்களையும் வேண்டுவோமாக.

ஏழை விவசாயிகளின் வாழ்வில் மங்கலப் பொங்கல்.....
எம்மவர் வாழ்விலும் மகிழ்ச்சிப் பொங்கல்——————

**மகிழ்ச்சிகரமான "சுவை" ததும்பும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்——————**

ஆண்டுகள் பல சென்றாலும் நாடும் ஏடும் போற்றும்
நறும் "சுவை" ஐஸ்கிறீம் வகைகளுக்கு கலப்படமற்ற பெயர் "லிங்கம்"——★

**லிங்கம் கூல்பார்** வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
அச்சுக் கலையின் முன்னோடிகள்:-

★ ★ ★

வண்ண வண்ண அச்சுவேலைகளை வகை வகையான பேப்பர்களில் உங்கள் எண்ணம்போற் செய்வதற்கும்
நினைவு மலர்கள், வாழ்த்துப்பாக்களை அழகிய செந்தமிழில் எழுதி அச்சிட்டுப் பெறுவதற்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

**சாந்தி அச்சகம்**

575, கே. கே. எஸ். வீதி, (நாச்சிமார் கோவிலடி) யாழ்ப்பாணம்.

ஃ தேவர்களுக்கு பகலின் ஆரம்பம்!!
ஃ எம்மவருக்கெல்லாம் தைப்பொங்கல் பண்டிகை!!!

★ மங்களம் பொங்கும் பொங்கல் வாழ்த்துக்கள் ★

புத்தம் புதிய டிசைன்களில்

**BATA DSI பாதணிகள்**

நியாய விலையில் விற்பனை செய்யும் ஒரே ஸ்தாபனம்

**CITY SHOE PALACE**

**சிற்றி பாதணி அகம்**

140, ஆஸ்பத்திரி வீதி, (நவீனசந்தை) யாழ்ப்பாணம்.

## பொங்கல்நல்வாழ்த்துக்கள்

★ சகல மருந்து தேவைகளுக்கும்
★ பால் மா வகைகளுக்கும்

**நியோ ஒக்ஸ்போர்ட்**

பார்மஸி அன் குறோசறி

741/1, காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரி முன்)

பொங்கிடுவோம் புதுப்புனல் கண்டிடுவோம்
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்திடுவோம்
அனைவரையும் வாழ்த்துகின்றோம்

தேடுவது அத்தனையும் நியாயவிலையில் கிடைக்கும் ஒரே ஸ்தாபனம்

சகலவிதமான பட்டு பருத்தி பிடவைகளுக்கும்
அலங்கார சாதனங்களுக்கும்

**ஹரன்** ரெக்ஸ்ரைல்ஸ் அன் பான்ஸி
பலாலி வீதி, திருநெல்வேலி.

கொக்குவில் மேற்கு சித்திவிநாயகர் கோவில்

**சுக்கிரவாரச் சொற்பொழிவு**

(ஆண்டு நிறைவும் 53-வது வார சொற்பொழிவும்)

விடயம்: **திருமூலரின் தவமந்திரம்**

நிகழ்த்துபவர்: 'சொல்மொழி வேந்தன்'
த. சிவகுமாரன் அவர்கள்
(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)
(அமைப்பாளர், காரைநகர் கம்பன்கழகம்)

காலம்: 15-01-93 வெள்ளிக்கிழமை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

— தேவஸ்தானம்

அன்பளிப்பு:
சுகன்யா றேடேர்ஸ்
பலாலி வீதி, திருநெல்வேலி. (சி-7140)

அனைவருக்கும் மங்களம் பொங்கிட பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

ஆங்கில மருந்துவகைகளுக்கு திருநெல்வேலியில்
பிரபல்யம் வாய்ந்த நிறுவனம்————

# குறிஞ்சி மெடிக்கல்ஸ்

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

"பொங்கலோ பொங்கல் என மங்களம் எங்கும் பொங்குக"
என Tasty ஸ்தாபனத்தார் வாடிக்கையாளர்
எல்லோரையும் வாழ்த்துகிறார்கள்



Tasty!

கோடைகாலங்களில் வீட்டுக்குவரும்
விருந்தாளிகளை மகிழ்விக்க

**NELLI CRUSH**
(இரு அளவுகளில் பெறலாம்)

ஒரு போத்தலில் அதிகளவு சுவையான பானம் தயாரிக்கலாம்

உங்கள் வியாபாரிகளிடம் கேட்டு வாங்குங்கள்

**TASTE LINE INDUSTRIES (Pvt) Ltd.**

No. 14, Seenier Lane, Jaffna.

சாவகச்சேரியில் எமது பிரதிநிதி "அறிவகம்" கண்டி வீதி, சாவகச்சேரி.

மங்களகரமான பொங்கல் வாழ்த்துக்கள்

தரமான பனிஸ், பாண், நல்லெண்ணெய்
இனிப்பு வகைகளின் மொத்தசில்லறை வியாபாரிகள்

ஈழநாடு பத்திரிகை முகவர்

கனகா றேடர்ஸ்

6, நவீன சந்தை, திருநெல்வேலிச் சந்தி,

தித்திக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

பாடசாலை உபகரணங்கள்
உபஉணவுப் பொருட்கள்
பிஸ்கட் இனிப்பு வகைகள்
அனைத்துக்கும் நியாய ஸ்தாபனம்.

பத்திரிகை விற்பனையாளர்கள்

சிவா ஸ்ரேசர்ஸ்

(யாழ். இந்துக் கல்லூரி முன்)
735ம் காங்கேசன்துறைசாலை, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும்

பொங்கல் வாழ்த்துக்கள்

ஃ அழகு சாதனப் பொருட்கள்.
ஃ அன்பளிப்புப் பொருட்கள்,
ஃ விலை மதிக்கமுடியாத
ஒப்பனைப் பொருட்களுக்கும்

—★— நியாய விலை ஸ்தாபனம் —★—

இராஜேஸ்வரி றேட்ஸ்

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

எங்கள் வாடிக்கையாளர்களுக்கு
எமது

பொங்கல் வாழ்த்துக்கள்

சுத்தமாகவும், சுகாதார முறைப்படியும்
சுவையான

★ ஐஸ்கிறீம் வகைகளையும்
★ குளிர் பானங்களையும்

தயாரிப்பதில் யாழ். நகரில் முன்னணி வகிப்பவர்கள்

ராஜா கிறீம் ஹவுஸ்

இல: 36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும்

இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

அனித்தா பயிற்சி நிலையம்

★ Sugar Craft
★ Bridal Make-up
★ Cookery
★ Hair Style
★ Facial
★ Needle Work
★ Cake Icing
★ Flower Making

வகுப்புக்கள்
தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அனித்தா பயிற்சி நிலையம்

பூநாறி மரத்தடி, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B

### போராளிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது ஒன்றரை மைல் நீளமான பகுதி போராளிகள் பக்கம் வீழ்ச்சியடைந்தது. இந்த வெற்றிகரமான தாக்குதலுக்காக இப்பகுதிகளைத் திறம்பட வேவு பார்த்த, தர்மேந்திரா, குலசங்கர், கொற்றவன், வெற்றிமணி, அரிமாவரசு, கதிரவன், நம்பி, ஆதவன், ஜெயம், சிவம் ஆகியோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

30-09-1992 அன்று வவுனியா சோட்டத்தில் எல்லைப் புறமான பதவியா-பராக்கிரமபுர பகுதியில் அமைந்துள்ள சோங்வேவ என்னும் இடத்தில் அமைந்திருந்த இராணுவ மினி முகாம் ஒன்றின் மீது போராளிகள் மேற்கொண்ட தாக்குதலில், மினி முகாம் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டது. இந்த முகாமை முழுமையாகத் தகர்த்தெறிவதற்காக, இதன் பகுதிகளைத் திறம்பட வேவு பார்த்த சூரியன், பரன், சுந்தரம் ஆகியோருக்கும் தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்

### மணலாறில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 7-30 மணியளவில், மணலாற்றிலுள்ள கிலோன் தியேட்டர் இராணுவ முகாமுக்கும் - முந்திரிகைத் தோட்ட இராணுவ முகாமுக்குமிடையிலுள்ள இராணுவ காவலரண்கள் மீதும், ரோந்து வந்த இராணுவ அணியொன்றின் மீதும் விடுதலைப்புலிகள் ஒரே நேரத்தில் மேற்கொண்ட 20 நிமிட அதிரடித்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில் பல ஆயுதங்களையும், இராணுவ சாதனங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

மேற்படி தாக்குதலில் புலிகளின் தரப்பில் லெப். குமணன் அல்லது சிவராஜ் (சின்னத்துரை சிவகுமார், செங்கலடி மட்டக்களப்பு) என்றபோராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

### பாரிஸ் பேச்சில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்காதபோதிலும் இரு தரப்புக்குமிடையில் சில உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக கனடாவிலிருந்து வெளிவரும் 'செந்தாமரை' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

திரு. திலகரை ஆதாரம் காட்டி வெளிவந்துள்ளசெய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இரு தரப்புப் பேச்சுக்களிலும் திருப்தி ஏற்படாத போதும் இனப்பிரச்னை குறித்துச் சில உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தையின் போது வடக்கு-கிழக்குப் பகுதிக்கு இரு இடைக்கால நிர்வாகம் அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு உடன்பாடு காணப்பட்டுள்ளதாம். இதன்படி வடக்கில் புலிகளின் நிர்வாகமும் கிழக்கில் ஏனைய தமிழ்க் கட்சிகளின் நிர்வாகமும் அமையும்.

வடக்கே உணவுப் பொருள்களும், மருந்துப்பொருள்களும் அனுப்புவதற்கும் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசு தரப்பும் புலிகளும் இரு தரப்பு இணக்கத்துடனான யுத்த நிறுத்தமில்லாது உத்தியோகப்பற்றற்ற முறையில் தொடர்ந்தும் பேச்சுக்களை நடாத்துவதற்கும் மேற்படி அரசுப் பேச்சாளரும் புலிகளும் உடன்பட்டுள்ளதாகவும் மேற்படி செய்தி திரு. திலகரை ஆதாரம் காட்டி வெளியிடப்பட்டுள்ளது. (இ)

### ஹமீத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஹமீத் அரச உயர் மட்டங்களுக்கு விளக்கமளித்துள்ளாராம்.

அமைச்சர் ஹமீத் கடந்த திங்கட்கிழமை தனது பாரிஸ், லண்டன் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

### விடுதலையான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் விடுதலை செய்த இரு பொலிசாரையும் அவர் அழைத்துக்கொண்டு பருத்தித்துறையிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கும் பின்பு பலாலிக்கும் சென்று அங்கிருந்து விமான மூலம் கொழும்பு சென்றனர். (வி-160)

மங்களகரமான பொங்கல் வாழ்த்துக்கள்!!

சுபகாரியங்களுக்கு ஏற்ற
சுவைமிகு பண்டங்களை
ஓடர்க்கு செய்துகொள்வதற்கு
ஒரே சைவ உணவகம்

கண்ணன் லொட்ஜ்

பரமேஸ்வரா சந்தி
திருநெல்வேலி

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள் ———

மங்கையர் இசைவுக்கு ஏற்ப
பட்டுபருத்தி பிடவை வகைகளுக்கும்
ரெடிமேட் ஆடைகளுக்கும்

லண்டன் புடவை நிலையம்

249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

தமிழினத்தின் எழுச்சித்
திருநாள் தைப்பொங்கல்
நந்நாளில இதயம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
ஆங்கில மருந்துவகைகளின் முன்னோடி
நற்பெயர் பெற்ற மருந்து விற்பனையாளர்கள்

பரணி பார்மஸி

ஆஸ்பத்திரி முன்
யாழ்ப்பாணம்

அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

பொது அறிவு

(அஷ்டலக்ஷ்மி 1993ன் வெளியீடு)

தொகுப்பாசிரியர்:
குலபதி ஆறுமுகம் கந்தையா J. P. அவர்கள்
விசேட அனுபந்தத்துடன் ரூபா 60/—
எங்கும் கிடைக்கும்.
மொத்த விற்பனையாளர்

ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை,

யாழ்ப்பாணம்.

மாணவ மணிகளுக்கு
பொங்கல் நல்வாழ்த்துக்கள்

COMPUTER TECHNOLOGY

புதிய பிரிவு
ஆரம்பம்: 16.01.93 சனி

Unikco Computer Centre
37, Clock Tower Road,
Jaffna.

(வெலிங்டன் சந்திக்கு வடக்குப் பக்கமாக உள்ள மேல்மாடி)